# தமிழிலக்கியங்களில் விழுமியக் கூறுகள்

**V. Varalakshmi**
*Phd Scholar (Part Time), (Tamil Department)*
*School / P.G.Teacher (Tamil)*
*DRBCCC Hindu Higher Secondary School, Thiruvallur*

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7728

***ஆய்வுச் சுருக்கம்***

*தொன்மையான மக்கள் கற்களை மூட்டியும், மூங்கில் ஒன்றோடு ஒன்று உரசும் போது தீயினை கண்டறிந்தனர் மலைகள் மேல் மோதித் திரும்பும் காற்றின் மூலம் ஒலி – எதிரொலியை கண்டறிந்தனர். நிலத்தை தோண்டி கிழங்கு எடுக்கும் பன்றியிடமிருந்து உழவைக் கற்றனர். கட்டுமரம் ஏறி கடலையே வென்றனர். ஏர்தழுவி உடலை உறுதி செய்தனர் கீளாநெல்லி மலைவேம்பு போன்ற சாதாரண செடிகளைக் கொண்டு நோய் தீர்த்தனர் பெண்களின் பெருமையை போற்றினர் முதுகுடி பெண்களுக்கு சிறப்பு செய்தனர் பெண்கள் பகட்டான வாழ்க்கையை விரும்பாமல் எளிமையும் உயர்வும் உள்ள வாழ்க்கையை விரும்பினர் இவை அனைத்தும் நாம் உணர்ந்தபிறகு இந்த களிகாலத்தில் விழுமியக் கூறுகளோடு வாழ்க்கையை நடத்தினால் சமுதாயம் எவ்வித சீர்கேடுமின்றி நலம் பெறும். ஒரு மனிதன் சுயநலமற்று இருந்தால், இந்த சமுதாயமே சுகம் பெறும் என்பதனை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.*

**முன்னுரை**

சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களை சங்க இலக்கியம் என்று கூறுகிறோம்.

**சங்ககாலம்**

**சங்க இலக்கியம்**

1. மேற்கணக்கு நுல்கள்
2. கீழ்கணக்கு நூல்கள்

**மேற்கணக்கு நூல்கள்**

1. பத்துப்பாட்டு
2. எட்டுத்தொகை

**பத்துப்பாட்டு**

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. சிறுபாணாற்றுப்படை
5. மலைபடுகடாம்
6. குறிஞ்சிப்பாட்டு
7. முல்லைப்பாட்டு
8. பட்டினப்பாலை
9. மதுரைக்காஞ்சி
10. நெடுநல்வாடை

**எட்டுத்தொகை**

**அகம் புறம் அகமும் புறமும்**

1. நற்றினை
2. குறுந்தொகை
3. கலித்தொகை
4. அகநாநூறு
5. ஐங்குறுநூறு
6. புறநாநூறு
7. பதிற்றுப்பத்து
8. பரிபாடல்

**கீழ்கணக்கு நூல்கள்**

**பதினெண் கீழ்கணக்கு நூல்கள்**

**அற இலக்கியங்கள்**

1. ஐந்திணை ஐம்பது
2. ஐந்திணை எழுபது
3. திணைமொழி ஐம்பது
4. திணைமாலை நூற்றைம்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. கைந்நிலை
8. இன்னா நாற்பது
9. இனியவை நாற்பது
10. திரிகடுகம்
11. ஏலாதி
12. சிறுபஞ்சமூலம்
13. ஆசாரக்கோவை
14. நான்மணிக்கடிகை
15. முதுமொழிக்காஞ்சி
16. பழமொழி
17. நாலடியார்
18. திருக்குறள்

சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் மனிதனுக்கு நல்வழிகாட்டும் பாலமாக இருந்தது.

**விழுமியம் என்றால் என்ன?**

மனிதனுடைய முழுமையான வாழ்க்கையை உணர்த்துவது விழுமியம் ஆகும்.

ஆங்கிலத்தில் விழுமியம் என்ற சொல் ஏயடரந என்ற சொற்பதம் விளக்குகிறது.

ஏயடரந என்ற ஒரு சொல் மதிப்பு, ஒரு பொருளின் தகுதி, மதிப்பு வாய்ந்தது என்றெல்லாம் விளக்குகிறது.

மனிதனுடைய வாழ்க்கையை நல்வழியில் மாற்றுவது விழுமியம் ஆகும்.

தமிழ் அகராதி:-விழுமியம் என்ற சொல் விழுப்பம், விழுப்பகை, விழுப்பொருள், விழுமியோர், விழுமியம், என்றெல்லாம் தமிழ் அகராதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**விழுப்பம் என்றால் என்ன?**

விழுப்பம் என்பது ஆசை, சிறப்பு, நன்மை, உயர்வு, அருமை, அழகு என்ற சொற்பதங்களால் விளக்கப்படுகிறது.

விழுமியம் என்பதற்கு சீர்மை என்று இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் விழுப்பொருள் என்பது மேன்மையான பொருள் என்று உணர்த்தப்படுகிறது.

**விழுமியோர் என்றால் யார்?**

அவர்தான் உயர்ந்தோர், சான்றோர், அறவழியில் செல்பவர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**விழுமியம் - தமிழ் இலக்கியம் கூறும் விளக்கம்**

ஒரு மனிதனுடைய வாழ்க்கை அளவீட்டினை எடுத்தியம்பி ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை விளக்குகிறது.

ஒரு மனிதன் நல்ல எண்ணங்கள், நற்செயல்கள், பிறருக்கு உதவுதல், இரக்க உணர்வு, பொய் பேசாதிருத்தல், களவு செய்யாதிருத்தல், புறம் பேசாதிருத்தல், தனக்கு எல்லாம் தெரியுமென்று தலைக்கணம் கொள்ளாதிருத்தல், பிறரைத் தாழ்த்திப் பேசாதிருத்தல், பொறாமைப் படாதிருத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், என்ற பல விதமான நற்குணங்களைத் தன்னிடத்தில் கொண்டிருத்தல் வேண்டும் என்று பதினெண்கீழ்கணக்கில் உள்ள பதினெட்டு நூல்களும் அறத்தைப் போற்றுகின்றன. திருக்குறளில் சொல்லப்படாத விழுமியக் கூறுகளே இல்லை எனலாம்.

**திருக்குறள்**

எவரொருவர் துன்பம் செய்தாலும் அவருக்கு நாம் துன்பம் அளித்தல் கூடாது என்பதை இன்னா செய்தாரை ஒருத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல். என்கிறார்.

னா என்ற எழுத்து ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் மூலமாக தீமை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் நாம் நன்மையே செய்ய வேண்டும் என்கிறார்.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**

என்று பொதுமறையில் தெய்வப்புலவர் வள்ளுவர் விளக்கியுள்ளார்.

அனைவரும் முக்கனிகளைத்தான் விரும்பி உண்பர். காய்களை யாரும் உண்ணமாட்டார். இதில் மாங்கனியை மட்டும் சிலர் காயாகவே உண்பர். அவ்வாறு உண்ணும் போது அவருடைய முகம் அஷ்டக் கோணங்களைக் காட்டும்.

ஆகவே நாம் எவ்வாறு கனிகளையே விரும்பி ஏற்றுக்கொள்வோமோ அதுபோல இனிய சொற்களைப் பேச வேண்டும்.

இனிய என்றால், என்னிடம் மாணவன் ஒருவன் வாயில் இனிப்பை போட்டுக் கொண்டு பேசலாமா என்றான்.

இனிய சொற்கள் என்றால் பிறருக்கு துன்பம் தராத சொற்கள், மனம் புண்படாத சொற்கள் என்பதை அவனிடத்தில் விளக்கினேன்.

நம்முடையச் சொற்களைக் கேட்ட பொழுதினில் அவருடைய அகமும்,முகமும் மலர்தல் வேண்டும். இதைத்தான் பொய்யாமொழி வள்ளுவர் தமிழ் வேதத்தில் உணர்த்துகிறார்.

நட்பைப் பற்றி கூறுகையில் மாதானுபங்கி வள்ளுவர் முப்பாலில்

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு**

என்று தெள்ளத்தெளிவாக நட்பைப் பற்றி பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் உணர்த்துகிறார்.

இலக்கியங்கள் காட்டும் மேற்கூறியக் கருத்துக்களை பின்பற்றாமல் இன்று, எப்படியும் வாழலாம் என்று சிலர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

இப்படித் தான் வாழ வேண்டும் என்று அறவழியில் வாழக்கூடியவர்கள் ஒரு சிலரே, குறைவாகவே உள்ளனர்.

1330 குறட்பாக்களிலும் எதைச்செய்ய வேண்டும் எதைச்செய்ய கூடாதென்று திருவள்ளுவர் நமக்கு வாழ்க்கை பாடத்தினைக் கற்பித்து நாம் விழுமியத்தோடு வாழ வழிவ குக்கிறார்.

### விழுமியம் என்றால் என்ன?

ஒரு மனிதனின் வாழ்க்கைமுறை அளவீட்டினை கண்ணாடி போல் எடுத்துக் காட்டுவது, எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை தெள்ளத் தெளிவாக விளக்குகிறது.

விழுமியம் என்பது ஒரு சமூக மதிப்பீடு, அளவீடு, தனிமனிதனின் வெற்றி என்றெல்லாம் கூறலாம்.

விழுமியம் என்பதை ஒரு தனி நபரின் சமூக வாழ்க்கையை வளப்படுத்துதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

விழுமியம் சமூக நீதியைக் கற்றுத்தருகிறது.

ஒரு சமூகத்தின், ஒரு தனிமனிதனின் நம்பிக்கை, எண்ணம், சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது தான் விழுமியம்.

### தமிழ் வரலாறு

நம்முடையச்சமூகம்நீண்டகாலவரலாறு உடையது. முன்னோர்கள் வகுத்துச் சென்ற பாதையினை மூடநம்பிக்கை என்று சிலர் ஒதுக்கிவிடுகிறார்கள். பரம்பரை மற்றும் பாரம்பரியம் மிக்கது என்பதை அறியாமல் சிலர் பேசுகின்றனர்.

### விழுமியக்கூறுகளைப் பற்றி ஆய்வோம்

விருந்தினரை இன்முகத்தோடு உபசரித்தல் ஒரு விழுமியக்கூறென இலக்கியம் கூறுகிறது.

மக்கட்பேற்றினையும் விழுமியக்கூறென இலக்கியம் கூறுகிறது.

குழந்தைப் பிறத்தலை நம் இலக்கியம் கொண்டாடியுள்ளது.

நம் சமூகம் தாய்வழி நிற்றல் சமூகம் என்பதை புறநானூறு விளக்குகிறது.

**ஈன்று புறந்தருதல் ஏந்தலைக்கடனே**

களர்களைந்து பெயர்தல் காளனுக்கு கடனே என்று பொன்முடியார் புறநானூற்றில் அறிவுறுத்தியுள்ளார்.

தன் அரசிக்கு குழந்தை பிறந்ததை அறிந்த மன்னன் போர்களத்திலிருந்து போருடையுடன் வந்து பார்த்தால் குழந்தையும் சிறந்த வீரனாக வருவான் என்பதை ஔவையார் கூறுகிறார்.

**நறுவரை துறந்தநாரோ**
**நறுந்தலை சிறார் தாயே**

என்று புறநானூற்றில் செம்முது பெண்டிர் தாய்வழி நிற்றலை உணர்த்தியுள்ளனர்.

**இயற்கை வழிபடுதல்**

இயற்கையை வழிபடுதல் என்பது தொன்றுதொட்டு வந்துள்ளது.

பூமி, சூரியன், மழை, காற்று, கடல் போன்ற இயற்கையை வழிபடுதல் அக்காலம்தொட்டே பின்பற்றப்படுகிறது.

இயற்கை சீற்றங்கள் மேல் உள்ள அச்சத்தின் காரணமாக அவற்றை கடவுளாக வழிப்பட்டனர் என்ற நற்றிணைப் பாடல் விளக்குகிறது.

அருங்களை நெடுவரை - என்று அகநானூறு பாடல் சொல்கிறது.

**வீரம், வெற்றி**

பழங்கால மக்கள் வீரத்தையும் அதன் மூலம் பெறும் வெற்றியையும் மிகவும் கொண்டாடினர்.

ஆநிரையை கவர்வது வெட்சித் திணையில் வெற்றியாகக் கொண்டாடினர்.

கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டு வருதலை கரந்தை திணையில் கொண்டாடப்பட்டது.

வீரர்கள் பலருக்கும் நிழலாகி உலக மக்களை காக்கின்றனர்.

தம்மினத்தாருக்காக உயிர்விடுதல் என்பது பெருமை என்று புறநானூறு விளக்குகிறது.

**நடுகல்**

நடுகல் எடுத்தலையும் வழிபடுதலையும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவை விளக்குகிறது.

இயற்கையாக மரணம் அடைவதைவிட பலரோடு போரிட்டு வீர மரணம் அடைவதே சிறந்தது என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகிறது. அவர்களே மேலானவர்கள்என்று இலக்கியம் எடுத்துரைக்கிறது.

காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்றெல்லாம் தொல்காப்பியம் விளக்குகிறது.

**புறநானூற்றில் மாங்குடிகிழார் - கல்லே**
**பரவின் அல்லது**
**நெல் உகுத்து பரவும்**
**கடவுளும் இலவே**

என்று வீரருடைய துணிவும், பெருமையும் வெகுச்சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

**பாதீடு**

போர்மூலமாக வந்த பொருளை அனைவரோடு பகிர்ந்து அளித்தல் என்ற நிகழ்வோடு மக்கள் அனைவருடன் நன்றாகப் பழகினர். மற்றும் தனக்கு கிடைத்த பொருட்களைப் பகிர்ந்து கொடுத்து நல்பழக்கத்தினை ஏற்படுத்தி உள்ளனர்.

**விருந்தோம்பல்**

முல்லை நில மக்கள் மூங்கில் குழாய்களில் எடுத்துச்செல்லும் உணவினைத் தானும் உண்டு பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணச் செய்தனர். இது அகநானூற்றில் விளக்கப்பட்டுள்ளது.

தான் சமைத்த உணவு தீர்ந்துவிட்ட போதிலும் விதைத்தினைகளை உரலிலிட்டு பசிப்போக்கிய செய்தியை புறநானூறு விளக்குகிறது.

விதை நெல்லையே விருந்தினருக்கு உபசரித்த நற்செயலின் மூலம் நாமும் இன்முகத்தோடு விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பதை அறிந்தோம்.

**புறநானூறு**

வீரர்கள் தங்களின் வீர வாளையும் விற்று விருந்து தந்தனர். மற்றவர்களின் பசியைப்போக்கினர். பசிப்பினி போக்குதலை தங்களின் முதற்கடமையாகக் கொண்டனர்.

**பெருநானூற்றுப்படை**

விருந்தினருக்கு நண்பர்களைப்போன்று நட்புறவோடு விருந்தளிக்க வேண்டும் என்கிறார்.

எளிய மக்கள் புல்லால் ஆன குடிசை வீட்டில் வாழ்ந்தாலும் விருந்தோம்பல் பண்புடன் சிறப்பாக வாழ்ந்தனர் என்பதை மலைபடுகடாம் விளக்குகிறது.

மூத்தோரைக் காத்தல்

குழந்தைப் பிறந்தவுடன் முதியோர்சுகை களால்தான் முதலில் குழந்தைகளைக் தூக்க வேண்டும், சர்க்கரை கொடுக்க வேண்டும், பெயர் சூட்டுகின்றபொழுது முதலில் ஊஞ்சலில் பெரியோர்போடுதல் வேண்டும் என்பதைப் பின்பற்றினர். இன்றும் பல வீடு களில் இம்முறை பின்பற்றப்படுகிறது.

தற்போதைய காலங்களில் முதியோர் இல்லங்கள் அதிகமாக காணப்படுகிறது. அம்மாவிற்கு தலைவலி என்றாலும் அலைபேசியிலே தொடர்புகொண்டு விச ாரிக்கும் பிள்ளைகள் மேலை நாட்டில் குவிந்துள்ளனர்.

தாய் இறந்ததை பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் பல நாட்கள் கழித்து தெரிவிக்கையில் காவல்துறையினர் வந்து பார்த்தபொழுது அழுகிய தாயின் உடலை கண்டெடுத்து மகனுக்கு செய்தி அனுப்பிய அசிங்கமெல்லாம் நம் நாட்டில் அரங்கேறியுள்ளது.

பணத்தாசை, கௌரவம், அகங்காரம் என்று சொல்லப்படும் பல தேவையில்லாத எண்ணங்களால் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மேலைநாட்டு மோகத்தை சிறுவயதிலே ஊட்டிவிடுகிறார்கள். அதனால் குழந்தைகள் வெளிநாடு சென்ற பிறகு பெற்றோருடன் தொடர்பு கொண்டு நலம் விசாரித்தலை மறந்துவிடுகிறார்கள். பல முதியோர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளை காணொலி மூலம் கண்டு போலியாக மகிழ்கின்றனர். மேலும் சிலர் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். நம் தாய்மொழியை மறந்து விட்டனரே என்று ஆதங்கப் படுகின்றனர். இதன்மூலம் நாம் பெற்றோர் நலம் கருதி வெளிநாடு செல்லகூடாது என்று விளக்கப்படுகிறது.

**அன்பு செலுத்துதல்**

உயிர்களின் மீது அன்பு செலுத்துதலை ஐங்குறுநூறு விளக்குகிறது. பால்வளம் சுரத்தலை பீரிட்டு எறும்புகளை அருந்தச் செய்தல், வயதான பசு தன் நிலத்தில் மேய்ந்தாலும் கரும்பை உணவாகக் கொடுத்து உபசரித்து எல்லா உயிர்களையும் அதிலும் மூத்தோரைக் காத்தல் என்ற பண்பை இதன்மூலம் வெளிப்படுத்துகிறது அகநானூறு.

**சிறுபானாற்றுப்படை**

மகா அர் அன்ன மந்தி என்று உமணர்கள் குழந்தைகளைப் போல் மந்திகளை காக்க வேண்டும் என்று விளக்குகின்றார்.

காக்கைக்கும் சோறிட வேண்டும் என்ற கடமையினை நற்றினை மிக அழகாக விளக்குகிறது.

நரை திரையின்றி வாழ்தல் என்பதை பிசிராந்தையார் புறநானூற்றில் விளக்குகின்றார்.

கரிகாலன் முதுமை கோலத்தில் வந்து நீதி சொன்னதைத் தான் அனைவரும் ஏற்றனர். ஆக முதியோருக்கு அக்காலத்தில் அதிகமான சிறப்பு செய்யப்பட்டது.

**முடிவுரை**

பண்டையத் தமிழர்களின் வாழ்க்கை, விழுமியங்களோடு இணைந்தது என்பதை நாம் பல நூல்களின் மூலம் அறிந்தோம்.

இழவு விழுகின்ற வீடுகளை ஆறுதல் படுத்தும் முகமாக இறந்த நாளில் இருந்து 8, 31, 41 வரை ஆறுதல் படுத்துதல், ஆற்றுப்படுத்துதல் என்பதை பல நூல்கள் விளக்குகிறது.

உலகப் பொதுமறை, நாலடியார், ஆத்திச்சூடி, பதினெண்கீழ்கணக்கு நூல்கள் கூறும் விழுமிய கருத்துக்களை கல்வெட்டாக வடித்துள்ளது.

இன்று மனிதன் வாழ்க்கை கைக்குள் சுருங்கியுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்களின் ஆதிக்கத்தின் மூலமாக இல்லத் தலைவி, தலைவர், பெரியோர்கள், மூத்தோர்கள், அன்றாடம் ஈர்க்கப்பட்டு, தொலைத்தொடர்பு சாதனங்கள்தான் வாழ்க்கை என்று வாழ்கின்றனர்.

இச்சாதனங்களால் வாழ்க்கை சுருக்கப்பட்டு மக்கள் எந்திரமான வாழ்க்கையையும் விரைவான வேகமான வாழ்க்கையையும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மனிதாபிமானம்இரக்கம் மற்றவர்களை புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளின் மூலம் வாழ்க்கை வளப்படுத்துப்படுகிறது என்பதை விழுமியக்கூறுகள் பெருமிதமானதாக மாற்றியமைக்கிறது. விவிலியம் பெருமளவு விழுமியத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டு என்பதன் மூலம் அறைந்தவனே இவன் ஏன் அமைதியாக இருக்கிறான? நாம் ஏன் இவனை அடித்தோம், என்று அவனையே சிந்திக்கத் தூண்டுவதன் மூலம் அறியலாம். எதிர்கால வாழ்க்கை மனிதநேயம், மனித பண்பு எங்கே செல்கிறது என்பதில் ஒரு சிறந்த முடிவை இளைய தலைமுறையினர்தான் எடுத்தல் வேண்டும். இளைய தலைமுறையினர் சடங்குகள், ஆலயம், அன்பு, சினேகம், ஆபத்தில் இருப்பவருக்கு உதவுதல் துன்பம் செய்தோருக்கும் நன்மையே செய்தல் வேண்டும் என்பதை உணர வேண்டும். இவ்வாறாக விழுமியங்கள் நம்மை வழி நடந்துகின்றன.